தமிழ்நாடு அரசு
தமிழ்வளர்ச்சித் துறை
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை–600 028.

## கலைச்சொற்களை விக்சனரி தளத்தில் பொது உரிமத்தில் வெளியிட இசைவு வழங்கக் கோருதல்

- தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் 1984ஆம் ஆண்டுமுதல் அகராதிப் பணிகளை மேற்கொண்டுவருகிறது.
- இவ்வியக்ககத்தின் "சொற்குவை" வலைத்தளத்தில் நாளிதுவரையில் 6,64,699 சொற்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- இவ்வியக்ககத்தில் 2016ஆம் ஆண்டுமுதல் செயற்பட்டுவரும் "தமிழ்க் கலைக்கழகம்" பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து, பலதுறை சார்ந்த வல்லுநர் குழுவின் ஏற்புக்குப் பின்னர் அரசாணை பெற்று, "சொற்குவை" (sorkuvai.com) வலைத்தளம் வழியாகப் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது.
- இந்நிலையில், இவ்வியக்ககத்தின் சொற்குவை வலைத்தளத்தில் உள்ள சொற்ளை விக்சனரியில் பொது உரிமத்தில் வெளியிட்டால், அச்சொற்களின் பயன்பாட்டளவு மேலும் அதிகரிக்கும் என்ற நோக்கத்தில், 2020–2021ஆம் ஆண்டு சட்டப்பேரவை தமிழ்வளர்ச்சி மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொமி, தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களால், இவ்வியக்ககத்தின் சொற்கள், மின்னூல்கள் ஆகியவை பொது படைப்பாக்க உரிமத்தில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பெற்றது.
- மேற்குறித்த அரசு அறிவிப்பின் அடிப்படையிலேயே இவ்வியக்ககத்தின் சொற்களை விக்சனரி தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

...2...

- இலகுவான புரிதல் என்ற நோக்கத்தில் சொற்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதால் சில நேரங்களில் தமிழ்க் கலைச்சொற்கள் இரட்டைச் சொற்களைக் கொண்டுள்ளன. பயன்பாட்டளவு அதிகரிக்கும் நிலையில் சொற்குறுக்கம் தானாக நிகழும். (கணிப்பொறி – கணினி ஆனதைப் போல்)

- ஒருவேளை, விக்சனரியில் தரவேற்றம் செய்தபின்னர், பயனர்களிடமிருந்து சொல்லாக்கத்தில் மாற்றுக்கருத்துகள் தெரிவிக்கப்பட்டால் (ஒற்றைச்சொல், சொற்சுருக்கம், மாற்றுச்சொல்) அதனையும் அரசின் இசைவு பெற்று மீள்தரவேற்றம் செய்ய இவ்வியக்ககம் அணியமாக உள்ளது.

- எனவே, ஒற்றைச்சொல்லாக இல்லை என்ற காரணத்தினால் இச்சொற்களை விக்சனரி தளத்தில் தரவேற்றம் செய்ய விதித்துள்ள இடைக்காலத் தடையை உடனடியாக நீக்கி, தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க இவ்வியக்ககத்தின் "சொற்குவை" வலைத்தளத்தில் உள்ள சொற்களை விக்சனரி தளத்தில் தரவேற்றம் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

13/12/21

இயக்குநர்

13/12/2021